கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.13/2024**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேம் நசீர் | வயது | 52 |
| தந்தை பெயர் | பாட்ஷா | ஜாதி | |
| தொழில் | ரியல் எஸ்டேட் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூரில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.04.2023 ம் தேதி மதியம் விஜயபுரத்தில் உள்ள பிரதோஷ் பள்ளிவாசல் தொழுகைக்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரி கஞ்சி காய்ச்சிக்கொண்டிருந்தார். என்னை பார்த்து விட்டு ஆஜர் எதிரி சொல்லமுடியாத வார்த்தைகளால் தரைக்குறைவாக பேசினார். அப்போது எனது நண்பர் பஜுல் ஹக் அங்கிருந்தார். அவர் முன்னிலையில் தான் ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார். நான் ஆஜர் எதிரியிடம் ஏன் இப்படி திட்டுறீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நான் அப்படி தான் திட்டுவேன். நீ யார் என்று கேட்டு பக்கத்தில் இருந்த கம்பியை எடுத்து இடது பக்க மண்டையில் அடித்து விட்டார். அதில் நான் இரத்தகாயம் ஏற்பட்டு மயக்கம் அடைந்தேன். அக்கம் பக்கதினர் தடுத்தனர். எனது மனைவிக்கு போன் மூலம் தகவல் கொடுத்தேன். அதில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். நான் சிகிச்சையில் இருந்தபோது திருவாரூர் நகர காவல் நிலைய போலீசார் என்னை விசாரணை செய்தனர். நடந்த சம்பவம் குறித்து போலீசாரிடம் புகார் வா்க்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (புகார் வாக்குமூலம் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மருத்துவரிடம் செல்லும்போது நிதானத்துடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு கத்திக்கும் இரும்பு ராடுக்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தேனா போலீசார் பதிவு செய்தனரா என்றால் போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் எனக்கு வழங்கப்பட்டதா என்றால் இல்லை. அன்றையதினம் பள்ளிவாசலில் நிறைய கூட்டம் என்றால் இல்லை. 20 முதல் 25 நபர்கள் தான் இருந்தனர். சம்பவத்தை வேடிக்கை பார்த்தவர்கள் எத்தனை பேர், தடுத்தவர்கள் எத்தனை பேர் என்றால் சம்பவ இடத்தில் 10 பேர்தான் இருந்தார்கள். எதிரி என் மீது கொடுத்த புகாரின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நான் இதே விசாரணை நீதிமன்றத்தில ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். இரண்டுமே ஒரே சம்பவத்திற்காக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு விசாரணை அதிகாரி என்னிடம் விசாரணை செய்தாரகளா என்றால் இல்லை. எதிரி என்னை தாக்கவில்லை எதிரி என் மீது கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எனது செல்வாக்கை பயன்படுத்தி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவில்லை, காயப்படுத்தவில்லை, நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

S CINTHA
Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20 17:55:22 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்